சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.09.06.2026.
SC.NO.204/2019
PW7 : Lw10- மாஸ்கோ (வயது 50 ) த/பெ.ராமசாமி
(1, 3 எதிரிகள் ஆஜர் இல்லை, 2,4 முதல் 6 எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் கொணலை கிராமத்தில் பஞ்சர் கடை வைத்து நடத்தி வருகிறேன். கொணலை அருகில் உள்ள பார்க்கிங்கில் ஈச்சர் வண்டியில் அட்டை பெட்டிகளை கொண்டு வந்து 06.09.2017 ஆம் தேதி காலை 7.00 மணியளவில் 6 நபர்கள் நிறுத்தி வைத்திருந்தார்கள். அதன் பிறகு அந்த இடத்திற்கு ஆம்னி வேன் ஒன்று வந்து நின்றது. அதில் 2 நபர்கள் இருந்தார்கள். ஈச்சர்வேனிலிருந்து அட்டை பெட்டிகளை ஆம்னி வேனிற்கு ஏற்றி கொண்டிருந்தார்கள்.

அதன் பின்னிட்டு கால் மணி நேரத்தில் போலிஸ் வாகனத்தில் போலிசார் அந்த இடத்திற்கு வந்தார்கள். 6 நபர்களில் 3 பேர் ஓடி சென்றுவிட்டார்கள் மீதி இருந்த 3 நபர்களை பிடித்து விசாரணை நடத்திக்கொண்டிருந்தார்கள். எனது கடை அருகில் தான் நடந்தது அதனால் நான் பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த நபர்களை விசாரணைக்கு பிறகு மதியம் அளவில் போலிசார் அங்கிருந்து அழைத்து சென்றுவிட்டார்கள்.

ஆஜர் எதிரிகள் அந்த 3 நபர்களா என்று சரியாக தெரியவில்லை. என்னுடன் வாட்ச்மேன் கிருஷ்ணமூர்த்தி இருந்தார். டீ கடை வைத்து நடத்தும் கார்த்திக் என்பவர் இருந்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரிவேண்டப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

06.09.2017 ஆம் தேதி காலை சுமார் 9 மணிக்கு NSR ஹோட்டல் அருகில் TN 27 U 1113 என்ற பதிவெண் கொண்ட ஈச்சர் லாரியிலிருந்து 6 நபர்கள் அட்டை பெட்டிகளில் உள்ள வெளிமாநில மது பாட்டில்களை TN 48 S 1764 என்ற பதிவெண் கொண்ட ஆம்னிவேனில் ஏற்றிக்கொண்டிருந்ததாகவும், அப்போது திருவெறும்பூர் மதுவிலக்கு அமலாக்கபிரிவு இன்ஸ்பெக்டர் மற்றும் போலிஸ் பார்ட்டியுடன் வருவதை கண்டவுடன் ஓட முயன்றவுடன் போலிசார் சுற்றி வளைத்து பிடிக்க முற்பட்டபோது, 3 நபர்கள்

மட்டும் பிடிப்பட்டதாகவும், மற்ற நபர்கள் ஓடிவிட்டதாகவும் பிடிபிட்ட நபர்களை போலிசார் விசாரித்தபோது, கலியபெருமாள் மகன் அண்ணாதுரை கோட்டப்பிள்ளை மகன் தர்மலிங்கம் ஆகிய இருவரும் திருச்சி, மண்ணச்சநல்லூர், ராசாம்பாளையத்தை சேர்ந்தவர்கள் என்றும் விநாயகம் மகன் மணிகண்டன் என்பவர் பாண்டிச்சேரி காட்டேரிகுப்பத்தை சேர்ந்தவர் என்றும் மேற்படி சம்பவத்தில் பிடிக்கப்பட்ட லாரி, ஆம்னிவேன் ஆகியவற்றை போலிசார் சோதனை செய்தததில் ACE AAA லேபிள் ஒட்டப்பட்ட 750 ML பிடிக்கக்கூடிய 12 பாட்டில்கள் கொண்ட அட்டை பெட்டிகளில் 400 அட்டை பெட்டிகளும் Black Grapes என்று லேபிள் ஒட்டப்பட்ட 750 ML பிடிக்கக்கூடிய 1 2 பாட்டில்கள் கொண்ட அட்டை பெட்டிகளில் 60 அட்டை பெட்டிகளும் ஆக மொத்தம் 460 அட்டை பெட்டிகளில் 5520 மது பாட்டில்கள் இருந்ததாகவும் அதில் சம்மந்தப்பட்ட எதிரிகளை போலிசார் கைது செய்ததாகவும் அவர்களிடம் இருந்த லாரி மற்றும் ஆம்னி வேனையும் அதிலிருந்த 5520 மது பாட்டில்களையும் போலிசார் கைப்பற்றியதாகவும் இச்சம்பவத்தை கொணலையை சேர்ந்த தேவராயன் மகன் கிருஷ்ணமூர்த்தி மற்றும் கொணலையை சேர்ந்த அன்பழகன் மகன் கார்த்திக் ஆகியோருடன் சேர்ந்து பார்த்ததாகவும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>கு.வி</u>** - இல்லை என முன்மொழியப்பட்டது.

/signed/
மாஸ்கோ

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2026.06.09 18:04:07 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி